# பொன்விழா நடை

## அறிமுகம்

பண்டைய தெமாசெக் அரசாட்சியிலிருந்து காலனித்துவ ஆட்சி, சுதந்திர தேசம், துரிதமான நகரமய மேம்பாடு, எதிர்காலம் என சிங்கப்பூர் கதையின் கடந்தகால, நிகழ்கால, எதிர்கால அம்சங்கள் அனைத்தையும் இணைக்கும் 8-கிலோமீட்டர் நீளப் பயணமே இந்தப் பொன்விழா நடை.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களான ஃபோர்ட் கேனிங் மலை, சிங்கப்பூர் ஆறு, குடிமை வட்டாரம், மரினா பே போன்றவை உள்ளடங்கும் இந்த நடையில், நமது நகரமயச் சூழலின் உருவாக்கத்திற்குப் பங்களித்த மக்களையும் சமூகங்களையும் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கும். 14ஆம் நூற்றாண்டில் வட்டார வணிக மையமாகத் திகழ்ந்த சிங்கப்பூரின் ஈர்ப்பு, காலனித்துவ மற்றும் குடியேற்ற முன்னோடிகளின் தொலைநோக்கு மற்றும் உழைப்பு, "மெர்டேக்கா" (மலாய் மொழியில் "சுதந்திரம்") சுதந்திரப் போராட்டம், நவீனகாலச் சிங்கப்பூர் அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு முன்னணி உலகமய நகரமாக இன்று உருவெடுத்திருக்கும் அனுபவம் போன்ற கதைகள் இந்நடையின்போது தெரியவரும்.

### 1 சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம்
*93 ஸ்டாம் ஃபர்ட் சாலை*

ராஃபிள்ஸ் நூலகம் மற்றும் அரும்பொருளகம் 1887ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இது பல ஆண்டுகளாகச் சிங்கப்பூர் மற்றும் சுற்றுவட்டாரத்தின் வரலாறு, சமூகம், தொல்லியல் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டி வைத்துள்ளது.

1960ஆம் ஆண்டு தேசிய அரும்பொருளகம் என பெயர்மாற்றம் பெற்ற இந்த அரும்பொருளகம், தேசத்தின் ஒட்டுமொத்த நினைவுகளைச் சேகரித்து, சிங்கப்பூரின் சாதனைகளையும் முக்கிய நிகழ்வுகளையும் படைக்கிறது.


தேசிய மரபுடைமைக் கழகம் கனிவுடன் வழங்கியது

### 2 ஃபோர்ட் கேனிங் பூங்கா
*ஹில் ஸ்திரீட், கேனிங் ரைஸ், கிளமென்சியூ அவென்யூ, ரிவர் வேலி சாலை ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது.*

தெமாசெக் எனும் 14ஆம் நூற்றாண்டு மலாய் அரசாட்சியின் அரியணை இது. பண்டைக்கால நாணயங்கள், ஜாவா தங்கம், சீன பீங்கான் உள்ளிட்ட ஏராளமான தொல்லியல் பொக்கிஷங்கள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டன. சிங்கப்பூர் நெடுங்காலமாக வணிக மையமாகத் திகழ்ந்து வந்ததற்கு இது சான்றாகும்.

முன்பொரு முறை அரசாங்கச் செயல்பாட்டுக்கும் பிற்பாடு ராணுவப் பயன்பாட்டுக்கும் பயன்படுத்தப்பட்ட ஃபோர்ட் கேனிங், இப்போது அடர்ந்த பசுமைச்சூழலின் மத்தியில் பாதுகாக்கப்படும் வளமான மரபுடைமையுடன், கலாசார, கலை நடவடிக்கைகளின் மையமாகத் திகழ்கிறது.



தேசிய மரபுடைமைக் கழகம் கனிவுடன் வழங்கியது

### 3 பெரனாக்கான் அரும்பொருளகம்
*39 ஆர்மீனியன் ஸ்திரீட்*

இந்தக் கட்டடத்தில் 1912 முதல் 1982 வரை டாவ் நன் பள்ளி செயல்பட்டு வந்தது. (கிளைமொழிக்குப் பதிலாக) மண்டரின், ஆங்கிலம் ஆகிய இருமொழி கற்பிப்பில் முன்னோடியாக விளங்கிய ஆரம்பகால உள்ளூர் கல்விக் கழகங்களில் இதுவும் ஒன்றாகும்.

பள்ளிக்குப் பிறகு, 1997ஆம் ஆண்டு முதல் ஆசிய நாகரிக அரும்பொருளகத்தின் முதல் பகுதி இக்கட்டடத்தில் அமைந்திருந்தது. வளமான பெரனாக்கான் கலாசாரத்தைக் காட்சிக்கு வைத்திருக்கும் பெரனாக்கான் அரும்பொருளகம் 2008ஆம் ஆண்டு இங்கு திறக்கப்பட்டது.


தேசிய மரபுடைமைக் கழகம் கனிவுடன் வழங்கியது

### 4 சிங்கப்பூர் அஞ்சல்தலை அரும்பொருளகம் மற்றும் சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்
*23B கோல்மன் ஸ்திரீட் (சிங்கப்பூர் அஞ்சல்தலை அரும்பொருளகம்); 1 கேனிங் ரைஸ் (சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்)*

இந்த இடம் 1886ஆம் ஆண்டு மலாயாவில் கட்டப்பட்ட முதல் மெதடிஸ்ட் தேவாலயத்தின் இருப்பிடமாகவும், அவர்களால் நடத்தப்பட்ட முதல் பள்ளியின் அமைவிடமாகவும் திகழ்ந்தது. ஆங்கிலம், சீனம் ஆகிய இரு மொழிகளிலும் இங்கு வகுப்புகள் நடத்தப்பட்டதால், இது ஆங்கிலோ-சீனப் பள்ளி என்று அழைக்கப்பட்டது.

தற்போது இந்த இடத்தில் 1995ஆம் ஆண்டு திறக்கப்பட்ட சிங்கப்பூர் அஞ்சல்தலை அரும்பொருளகமும் 1997ஆம் ஆண்டு இங்கு இடம் மாறிச்சென்ற சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகமும் அமைந்துள்ளன.



சிங்கப்பூர் அஞ்சல்தலை அரும்பொருளக சேகரிப்பு, பேராசிரியர் சியா ஜின் செங் கனிவுடன் வழங்கியது

### 5 செயின்ட் கிரகரி பிரகாசர் ஆர்மெனிய அப்போஸ்தல தேவாலயம்
*60 ஹில் ஸ்திரீட்*

ஆரம்பகால 19ஆம் நூற்றாண்டில் வணிகத்திற்காகச் சிங்கப்பூருக்கு வந்த ஆர்மெனிய சமூகத்தினர், இங்கேயே வாழ்க்கையை அமைத்துக்கொண்டு, 1835ஆம் ஆண்டு இந்தத் தேவாலயத்தைக் கட்டினார்கள். இதுவே சிங்கப்பூரின் ஆகப் பழமையான கிறிஸ்துவ தேவாலயம்.


சிங்கப்பூரில் வேரூன்றிய சமூகங்களால் கட்டப்பட்ட வேறு இரண்டு நினைவுச்சின்னங்களும் இதே அக்கம்பக்கத்தில் அமைந்துள்ளன -- அவைதான் மஸ்ஜித் அல்-புர்ஹானி பள்ளிவாசல் மற்றும் சிங்கப்பூர் சீன வர்த்தகத் தொழில் சபை.


தேசிய மரபுடைமைக் கழகம் கனிவுடன் வழங்கியது

### 6 மத்திய தீயணைப்பு நிலையம்
*62 ஹில் ஸ்திரீட்*

சிங்கப்பூர் தீயணைப்புப் படையின் நவீனமயத்தின் ஒரு பகுதியாக 1909ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்தக் கட்டடம், "கட்டுப்போட்ட இரத்தக் காயக் கறை" போன்ற வெளித்தோற்றத்துடன் காட்சியளிக்கிறது. இரண்டாம் உலகப்போரின் போது தீயணைப்பு நிலையத்தைப் பாதுகாப்பதற்காக உருமறைப்பு வண்ணம் அடிக்கப்பட்ட போதிலும், பல முறை நேரடி குண்டுவீச்சுத் தாக்குதல்களுக்கு இலக்கானது.

இதுவே சிங்கப்பூரின் ஆகப் பழமையான தீயணைப்பு நிலையம். சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படை இங்கு மரபுடைமை காட்சிக்கூடம் ஒன்றை நடத்துகிறது.


தேசிய மரபுடைமைக் கழகம் கனிவுடன் வழங்கியது


### 7 முன்னைய ஹில் ஸ்திரீட் காவல் நிலையம்
*140 ஹில் ஸ்திரீட்*

இந்தக் கட்டடம் காவல் நிலையமாகவும் படைவீரர் குடியிருப்பாகவும் 1934ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டபோது, இதுவே ஆகப்பெரிய அரசாங்கக் கட்டடமாகத் திகழ்ந்தது. இரண்டாம் உலகப் போரின்போது, இந்தக் கட்டடம் புலன்விசாரணை நிலையமாகப் பயன்படுத்தப்பட்டது.

அதன்பிறகு பல்வேறு அரசாங்க அமைப்புகளால் பயன்படுத்தப்பட்ட இந்தக் கட்டடத்தில் தற்போது தொடர்புத் தகவல் அமைச்சும், கலாசார, சமூக, இளையர் அமைச்சும் செயல்படுகின்றன.



திருமதி ஜே ஏ பென்னட் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் கனிவுடன் வழங்கியது




## இருப்பிடம் திட்டம்

### பொன்விழா நடை

- 1 சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம்
- 2a ஃபோர்ட் கேனிங் பூங்கா (சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம் நுழைவாயில)
- 2b ஃபோர்ட் கேனிங் பூங்கா (ஹில் ஸ்திரீட் நுழைவாயில்)
- 2c ஃபோர்ட் கேனிங் பூங்கா (கிளமென்சியு அவனியூ நுழைவாயில்)
- 3 பெரனாக்கான் அரும்பொருளகம
- 4 சிங்கப்பூர் அஞ்சல்தலை அரும்பொருளகம் சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்
- 5 செயின்ட் கிரகரி பிரகாசர் ஆர்மெனிய அப்போஸ்தல தேவாலயம்
- 6 மத்திய தீயணைப்பு நிலையம்
- 7 மத்திய தீயணைப்பு நிலையம்
- 8 சிங்கப்பூர் ஆறு
- 9 ஆசிய நாகரிக அரும்பொருளகம்
- 10 விக்டோரியா அரங்கம் மற்றும் விக்டோரியா இசை மண்டபம்
- 11 பாடாங்
- 12 சிங்கப்பூர் தேசிய கலைக்கூடம்
- 13 முன்னாள் நாடாளுமன்றக் கட்டடத்திலுள்ள கலை இல்லம்
- 14 (ஆர்ட்ஸ் ஹவுஸ்)
- 15 நாடாளுமன்ற இல்லம்
- 16 ஃபுல்லர்ட்டன் கட்டடம்
- 17 ஃபுல்லர்ட்டன் வாட்டர்போட் ஹவுஸ்
- 18 மெர்லயன் பூங்கா
- 19 பொன்விழாப் பாலம்
- 20 எஸ்ப்லனேட் - கடலோரக் கலை அரங்குகள்
- 21 ஹீலிக்ஸ் பாலம்
- 22 கரையோரப் பூந்தோட்டங்கள்
- 23 மரினா அணைக்கட்டு

### 8 சிங்கப்பூர் ஆறு
*போட் கீ வழியாகச் சென்றடையலாம்*

சிங்கப்பூர் 1819ஆம் ஆண்டில் தீர்வையற்ற துறைமுகமாக அறிவிக்கப்பட்ட பிறகு வணிகத்துறை செழிப்பாக வளர்ச்சியடைந்து, ஆற்றுப்பகுதியில் குடியேற்றச் சமூகங்கள் குடியேறியதால், சிங்கப்பூர் ஆறு விரைவில் தீவின் உயிர்நாடியானது.

1970களுக்குள், 150 ஆண்டுகளுக்கு மேற்பட்ட குப்பைகள் ஆற்றில் நிரம்பி வழிந்தோடின. சிங்கப்பூரின் முதல் பிரதமர் லீ குவான் இயூ, பத்தாண்டு காலச் சுத்தப்படுத்தும் பணியைத் தொடங்கிவைத்து, சிங்கப்பூர் ஆற்றைக் கண்கவர் நீர்முகப்பு வாழ்க்கைப்பாணி மையமாக உருமாற்றினார்.



தேசிய மரபுடைமைக் கழகம் கனிவுடன் வழங்கியது

### 9 ஆசிய நாகரிக அரும்பொருளகம்
*1 எம்ப்ரஸ் பிளேஸ்*

1867ஆம் ஆண்டில் நீதிமன்றமாகக் கட்டப்பட்ட இந்த அரும்பொருளகத்திற்குப் பக்கத்தில் எம்ப்ரஸ் பிளேஸ் எனப் பெயரிடப்பட்ட சதுக்கம் அமைந்துள்ளது. இந்தியாவின் பேரரசி என்ற பட்டத்தையும் ஏற்றிருந்த பிரிட்டனின் விக்டோரியா ராணியைக் கௌரவிக்கும் வகையில் 1907ஆம் ஆண்டு சதுக்கத்திற்கு எம்ப்ரஸ் பிளேஸ் எனப் பெயரிடப்பட்டது.

எம்ப்ரஸ் பிளேசில்தான் 1950களில் "மெர்டேக்கா" சுதந்திரத்திற்காக அறைகூவல் விடுக்கப்பட்டது. சிங்கப்பூர் குடியுரிமைப் பதிவகம் செயல்பட்டுவந்த இந்தக் கட்டடம், 2003ஆம் ஆண்டில் ஆசிய நாகரிக அரும்பொருளகமாக மாற்றப்பட்டது.


சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் கனிவுடன் வழங்கியது

### 10 விக்டோரியா அரங்கம் மற்றும் விக்டோரியா இசை மண்டபம்
*9 எம்ப்ரஸ் பிளேஸ்*

1862ஆம் ஆண்டில் நகர மண்டபமாகக் கட்டி முடிக்கப்பட்ட விக்டோரியா அரங்கம், இப்போது சிங்கப்பூரின் ஆகப் பழமையான மேடைக்கலை மையமாகத் திகழ்கிறது. 1903ஆம் ஆண்டுக்கும் 1905ஆம் ஆண்டுக்கும் இடையில் கட்டப்பட்ட நினைவு மண்டபம் (இந்நாளின் விக்டோரியா கலை மண்டபம்), ஒரு மணிக்கூண்டின் மூலம் நகர மண்டபத்துடன் இணைக்கப்பட்டது.

இந்த மண்டபங்களில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பற்பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. 1959ஆம் ஆண்டில் சிங்கப்பூரின் தேசிய கீதமாக ஏற்கப்பட்ட "மஜுலா சிங்கப்பூரா" பாடல் இங்குதான் முதன்முதலில் படைக்கப்பட்டது.


சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் கனிவுடன் வழங்கியது

### 11 எஸ்ப்லனேட் பூங்கா
*கானத் டிரைவ் வழியாகச் சென்றடையலாம்*

19ஆம் நூற்றாண்டிலிருந்து சமூக ஒன்றுகூடல் இடமாகத் திகழ்ந்து வரும் எஸ்ப்லனேட் பூங்காவில் நாட்டின் ஆரம்பகாலப் போராட்டங்களின் முக்கிய நினைவுச்சின்னங்களும் அமைந்துள்ளன. டான் கிம் செங் நீரூற்று, முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போர் நினைவுச்சின்னம், இந்திய தேசிய ராணுவ நினைவுச்சின்னம், மலாயா கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிரான போராட்டத்தின் நினைவுத்தகடு ஆகியவை அவற்றுள் அடங்கும்.


சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் கனிவுடன் வழங்கியது

### 12 பாடாங்
*செயின்ட் அன்ட்ரூஸ் சாலை வழியாகச் சென்றடையலாம்*

நில மீட்புக்கு முன்பாகக் கடலோரத்தில் அமைந்திருந்த பாடாங்கில் பற்பல குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. 1945ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப் போரின் முடிவு, 1966ஆம் ஆண்டில் முதல் தேசிய நாள் அணிவகுப்பு, ஆக அண்மையில் 2015ஆம் ஆண்டில் சிங்கை50 தேசிய நாள் அணிவகுப்பு ஆகியவை அந்நிகழ்வுகளில் உள்ளடங்கும். சிங்கப்பூர் கிரிக்கெட் மன்றமும் சிங்கப்பூர் பொழுதுபோக்கு மன்றமும் கூட பாடாங்கில் அமைந்துள்ளன.


சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் கனிவுடன் வழங்கியது

### 13 சிங்கப்பூர் தேசிய கலைக்கூடம்
*1 செயின்ட் அன்ட்ரூஸ் சாலை*

முன்னாள் நகர மண்டப, உச்ச நீதிமன்றக் கட்டடங்களில் சிங்கப்பூர் தேசிய கலைக்கூடம் அமைந்திருக்கிறது. நகர மண்டபக் கட்டடத்தில் தான் 1945ஆம் ஆண்டு ஜப்பானியர்கள் சரணடைந்தனர். போர்க்குற்ற வழக்கு விசாரணைகள் 1946ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் நடத்தப்பட்டன.

1965ஆம் ஆண்டில், நகர மண்டபத்திலிருந்த அப்போதைய பிரதமர் லீ குவான் இயூ அவர்களது அலுவலகத்திலிருந்து சிங்கப்பூரின் சுதந்திரப் பிரகடனம் வெளியிடப்பட்டது.


சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் கனிவுடன் வழங்கியது

### 14 முன்னாள் நாடாளுமன்றக் கட்டடத்திலுள்ள கலை இல்லம் (ஆர்ட்ஸ் ஹவுஸ்)
*1 ஓல்டு பார்லியமன்ட் லேன்*

1827ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட இந்தக் கட்டடம்தான் சிங்கப்பூரில் இன்றுவரை நீடித்து நிலைத்திருக்கும் ஆகப் பழைய அரசாங்கக் கட்டடமாகும்.

1955ஆம் ஆண்டுக்கும் 1963ஆம் ஆண்டுக்கும் இடையில் சட்டசபையும், 1965ஆம் ஆண்டுக்கும் 1999ஆம் ஆண்டுக்கும் இடையில் சிங்கப்பூர் நாடாளுமன்றமும் செயல்பட்டுவந்த முன்னாள் நாடாளுமன்றக் கட்டடத்தில், நாட்டு நிர்மாணத்தின் ஆரம்பகால ஆண்டுகளில் அரசியல் விவாதங்கள் நடைபெற்றன. இன்று, பற்பல கலை நிகழ்ச்சிகளும் விழாக்களும் நடைபெறும் மையமாக இந்தக் கட்டடம் திகழ்கிறது.


சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் கனிவுடன் வழங்கியது

### 15 நாடாளுமன்ற இல்லம்
*1 பார்லியமன்ட் பிளேஸ்*

இந்த அரசாங்கக் கட்டடத்தில் 1999ஆம் ஆண்டிலிருந்து சிங்கப்பூர் நாடாளுமன்றம் செயல்பட்டு வருகிறது. நாடாளுமன்ற ஜனநாயகத்தில் சிங்கப்பூர் நிலைநாட்டி வரும் கடப்பாட்டை இக்கட்டடம் பிரதிபலிக்கிறது. சிங்கப்பூரின் நாடாளுமன்றச் செயல்முறை பற்பல உள்நாட்டுச் சீரமைப்புகளை உள்ளடக்கும் வகையில் உருமாறியுள்ளது. சிறுபான்மையினரின் உரிமைகளுக்கான அதிபர் மன்றம், குழுத்தொகுதிகள், நியமன நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றவை அந்தச் சீரமைப்புகளில் உள்ளடங்கும்.


சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் கனிவுடன் வழங்கியது

### 16 ஃபுல்லர்ட்டன் கட்டடம்
*1 ஃபுல்லர்ட்டன் ஸ்குவேர்*

முன்னாள் தலைமை அஞ்சலகமான இந்தக் கட்டடம், சிங்கப்பூர் நீர்முகப்பின் முக்கிய கட்டடங்களில் ஒன்றாக 1928ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. அதன்பின்னர், இங்கு கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டது. அரசியல் கூட்டங்கள் நடத்த அடிக்கடி பயன்படுத்தப்பட்ட இந்த வளாகத்தைப் பல்வேறு பொது அமைப்புகளும் பயன்படுத்தின.

1990களில், கட்டடம் புதுப்பிக்கப்பட்டு ஃபுல்லர்ட்டன் ஹோட்டல் திறக்கப்பட்டது.


சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் கனிவுடன் வழங்கியது

### 17 ஃபுல்லர்ட்டன் வாட்டர்போட் ஹவுஸ்
*3 ஃபுல்லர்ட்டன் சாலை*

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிங்கப்பூர் துறைமுகத்திற்குப் பொறுப்பு வகித்த மாஸ்டர் அட்டண்டன்ட் எனும் தலைமை அதிகாரியின் அலுவலகம் அமைந்திருந்த இவ்விடத்திலிருந்து கடல்முகப்பின் பரந்த காட்சியைக் காணலாம். 1949ஆம் ஆண்டு கட்டப்பட்டு, பிற்பாடு சிங்கப்பூர் துறைமுக ஆணையத்தால் பயன்படுத்தப்பட்ட ஃபுல்லர்ட்டன் வாட்டர்போட் ஹவுஸ், 1990 வரை கப்பல்களுக்கு நன்னீர் விநியோகித்தது.


வோங் குவான் சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் கனிவுடன் வழங்கியது

## பொன்விழா நடையின் விவரம்

சிங்கப்பூர் சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு 2015ஆம் ஆண்டில் அறிமுகமான பொன்விழா நடை, நம் நாட்டு நிர்மாணத்தின் முக்கிய சாதனைகளை நினைவுகூறும் நமது பொன்விழா கொண்டாட்டத்தின் நீடித்த நடவடிக்கையாகும். கலாசார, சமூக, இளையர் அமைச்சு, தேசிய மரபுடைமை கழகம், தேசிய பூங்கா கழகம், நகர சீரமைப்பு வாரியம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் கூட்டு முயற்சியுடன் இந்த நடை அறிமுகமானது.

கொண்டாட்டம் — SG50

நாட்டுப்படம் கூட்டாக தயாரித்த — Urban Redevelopment Authority; National Heritage Board

சிங்கப்பூர் மரபுடமை பற்றி மேலும் தகவலுக்கு **http://nhb.gov.sg/** காணலாம்

National Heritage Board

சிங்கப்பூர் கட்டப்பட்ட பாரம்பரியத்தை பற்றி மேலும் தகவலுக்கு **http://ura.sg/consportal** காணலாம்

My Conservation Portal

### 18 மெர்லயன் பூங்கா
*எஸ்ப்லனேட் டிரைவிலிருந்து சென்றடையலாம்*

மெர்லயனின் சிங்கத் தலையும் மீன் உடலும், சமஸ்கிருத மொழியில் "சிங்க நகரம்" என்ற அர்த்தமுள்ள "சிங்கப்பூரா", ஜாவா மொழியில் "கடல் நகரம்" என்ற அர்த்தமுள்ள "தெமாசெக்" ஆகிய சிங்கப்பூரின் பண்டைக்காலப் பெயர்களைக் குறிப்பிடுகின்றன. ஆரம்பத்தில் இது சிங்கப்பூர் ஆற்றின் முகப்பில் அமைந்திருந்தது. பிற்பாடு 2002ஆம் ஆண்டில் மெர்லயன் பூங்காவுக்கு இடம் மாற்றப்பட்டது.


1972ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்தச் சிலை, சிங்கப்பூரின் கடந்தகாலத்தை அதன் கடல்துறை வளர்ச்சியுடன் ஒன்றிணைக்கிறது. கலைஞரும் கல்வியாளருமான குவான் சாய் கியோங் வடிவமைத்த இச்சிலையை, சிற்பி லிம் நாங் செங் செதுக்கினார்.



சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் கனிவுடன் வழங்கியது

### 19 பொன்விழாப் பாலம்
*மெர்லயன் பூங்கா, எஸ்ப்லனேட் டிரைவ் வழியாகச் சென்றடையலாம்*

இந்த 220 மீட்டர் நீளப் பாலம், மெர்லயன் பூங்காவையும் எஸ்ப்லனேட்டின் நீர்முகப்புக் கடைத்தொகுதியையும் இணைத்து, குடிமை வட்டாரம், மத்திய வர்த்தக வட்டாரம், மரினா பே ஆகியவற்றின் கண்கவர் காட்சியை வழங்குகிறது. சிங்கப்பூரின் பொன்விழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, பிரதமர் லீ சியன் லூங் 2015ஆம் ஆண்டில் பாலத்தைத் திறந்து வைத்தார்.




### 20 எஸ்ப்லனேட் – கடலோரக் கலை அரங்குகள்
*1 எஸ்ப்லனேட் டிரைவ்*

டுரியான் பழத்தைப் போன்ற வடிவத்தினால் சட்டெனெ அடையாளம் காணப்படும் எஸ்ப்லனேட் – கடலோரக் கலை அரங்குகள், சிங்கப்பூரின் முன்னணி நிகழ்கலை மையமாக 2002ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. உலகப் புகழ்பெற்ற கலைப்படைப்புகள், தனிப்பட்ட படைப்புகள், சமூக விழாக்கள் போன்ற பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் இங்கு நடைபெறுகின்றன.


எஸ்ப்லனேட் கரையோரக் கலை அரங்குகள் கனிவுடன் வழங்கியது

### 21 ஹீலிக்ஸ் பாலம்
*ராஃபிள்ஸ் அவென்யூ வழியாகச் சென்றடையலாம்*

2010ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஹீலிக்ஸ் பாலம், மரினா பே வட்டாரத்திலுள்ள 3.5 கிலோமீட்டர் நீள நீர்முகப்பு உலாவிடத்தின் ஒரு பகுதியாகும். மரபணுக்கள் போன்ற சுருள் வடிவ இரும்புக் கட்டுமானமான ஹீலிக்ஸ் பாலம், "வாழ்க்கையும் அதன் தொடர்ச்சியும்" என்ற தத்துவத்தைச் சித்தரித்து, தோட்டங்களுக்கு மத்தியிலும் நீர்சூழ்ந்த நிலையிலும் மக்கள் வசிப்பதற்கும் வேலை செய்வதற்கும் விளையாடுவதற்கும் உகந்த வகையில் மரினா பே விளங்கவேண்டும் என்ற சிங்கப்பூரின் கனவைப் பிரதிபலிக்கிறது.



### 22 கரையோரப் பூந்தோட்டங்கள்
*18 மரினா கார்டன்ஸ் டிரைவ்*

நகர மையத்திலுள்ள "மக்களின் தோட்டமாகத்" திகழும் கரையோரப் பூந்தோட்டங்களில் பே சவுத், பே ஈஸ்ட், பே சென்ட்ரல் ஆகியவை உள்ளடங்குகின்றன. பூந்தோட்டங்களும் அதன் தாவரக் காப்பகங்களும் பன்மயமான தாவர உலகின் இயற்கை அழகை வெளிப்படுத்தும் அதே வேளையில், நீடித்த நிலைத்தன்மையையும் ஊக்குவிக்கின்றன.

தாவரக் கழிவிலிருந்து உற்பத்தியான எரிசக்தியுடன் தாவரக் காப்பகங்களுக்குக் குளிரூட்டப்படுகிறது. செயற்கைப் பெரு மரங்களுக்குச் சூரியசக்தி மூலம் ஒளியூட்டப்படுகிறது. அருகிலுள்ள மரினா நீர்த்தேக்கத்திற்குள் நீரோட்டம் செல்வதற்குமுன், நீர்த்தாவரங்கள் தண்ணீரை வடிகட்டிச் சுத்தம் செய்துவிடுகின்றன.



### 23 மரினா அணைக்கட்டு
*8 மரினா கார்டன்ஸ் டிரைவவ்*

2008ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட மரினா அணைக்கட்டு, சிங்கப்பூரின் பரப்பளவில் ஆறில் ஒரு பங்கு அளவிலான நீர்ப்பிடிப்புப் பகுதியுள்ள நன்னீர் நீர்த்தேக்கமாகவும் வெள்ளக் கட்டுப்பாட்டு அணையாகவும் முக்கியப் பங்காற்றுகிறது. இது குடும்பங்களால் பெரிதும் விரும்பப்படும் உல்லாசத்தளமாகவும் திகழ்கிறது. நாம் எதிர்நோக்கும் கட்டுப்பாடுகளை எதிர்கொண்டு, இத்தீவை அனைவருக்கும் மேம்பட்ட இல்லமாக உருமாற்றிட சிங்கப்பூர் தொடர்ந்து மேற்கொண்டு வரும் புத்தாக்க முயற்சிகளின் அடையாளச் சின்னமாகத் திகழ்கிறது மரினா அணைக்கட்டு.

